தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, வைகாசி 22, திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 ஜூன் 5, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி."

உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் மழையை நம்பி வாழ்கின்றன. அதுபோல மக்கள் அனைவரும் ஆட்சியாளரின் நீதி தவறாத நெறிமுறைகளை நம்பி வாழ்கின்றனர்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

121—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***7079—திரு. கி. மாணிக்கம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், கருப்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், கருப்பட்டி உயர்நிலைப் பள்ளி, அரசால் நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை நிறைவு செய்யாததால், தற்போது அப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.*

திரு. கி. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை வாழ வைத்த எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கடந்த 1996 ஆம் ஆண்டு முதல் கடந்த 10, 12 ஆண்டுகளுக்கு மேலாக ஜல்லிக்கட்டுக்காக நடந்து வந்த போராட்டத்தை தனது மதிநுட்பத்தால் பொறுமையாக, நிதானமாகக் கையாண்ட மாண்புமிகு தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சர், இன்றைய துணை முதலமைச்சர் அவர்கள் 23–1–2017 அன்று மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்குப்பின் அன்று மாலையே சட்டமன்றத்தினுடைய சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, தீர்மானத்தை நிறைவேற்றி, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, ஜல்லிக்கட்டு நடத்தத் தடையில்லை என்ற நிரந்தர உரிமையைப் பெற்றுத் தந்தார்கள். எங்களது சட்டமன்றத் தொகுதியில் 248 வருட ஜல்லிக்கட்டு வரலாற்றில் இல்லாத அளவுக்கு 16–1–2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் நேரில் கலந்துகொண்டு, உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டை கொடியசைத்துத் துவக்கி வைத்தார்கள். அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுக்கு மங்காப் புகழைப் பெற்றுத் தந்த எங்கள் மாசற்ற மாணிக்கங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அந்த விழாவிற்குச் சிறப்பு சேர்க்கின்ற வகையில் அந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைத்து மாண்புமிகு

2018 ஜூன் 5]

அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், கருப்பட்டி உயர்நிலைப் பள்ளியானது கிராமப் பகுதியிலே அமைந்திருக்கிறது. அப்பள்ளியில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை 230–க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். இன்றையதினம் வெளிவந்திருக்கக்கூடிய NEET *தேர்வின் முடிவுகளில் தமிழகத்தின் மாணவர்கள் நல்ல மதிப்பெண்களை, நல்ல தரவரிசையைப் பெற வழிவகை செய்து தந்த பள்ளிக் கல்வித் துறையிலே தனி முத்திரையைப் பதித்துக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் இப்பள்ளியைத் தரம் உயர்த்துவது குறித்து கருணையோடு எடுத்துச் சென்று பின்தங்கிய பகுதியிலிருக்கக்கூடிய இந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தந்து அந்த மாணவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைக்க வேண்டுமாய் அன்போடு கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருப்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டார்கள். அந்தப் பள்ளிக்கென மொத்தமாக 19 சென்ட் நிலம்தான் இருக்கிறது. மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த குறைந்தது 3 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. இது ஒரு விஷயம். இரண்டாவதாக, இப்பள்ளியைத் தரம் உயர்த்தவேண்டுமென்றால் ரூ.2 இலட்சம் நிதி செலுத்தப்பட வேண்டும். அந்தத் தொகையும் செலுத்தப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்சொன்ன அரசின் அனைத்து விதிமுறைகளையும் பூர்த்தி செய்வார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை*

இந்த ஆண்டே நிறைவேற்றித் தரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.

திரு. கி. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர் புரட்சித் தலைவர் அவர்கள். கேட்காமலேயே, அறிவிக்கப்படாமலேயே, பல்வேறு நலத் திட்டங்களை பேரவை விதி 110–ன்மூலமாக தமிழகத்திற்கு வாரி வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியை அவர்களது வழியிலேயே நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு இது. சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றை நிவர்த்தி செய்து கொடுத்தால், அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதை நான் வரவேற்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அத்தனை குறைபாடுகளையும் இந்த ஆண்டிலேயே நிவர்த்தி செய்து தருகிறோம். இந்த ஆண்டிலேயே அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயின் உள்ளத்தால்தான் ஒரு குழந்தையின் உள்ளத்தைப் பற்றி புரிந்துகொள்ள முடியும். இன்றைக்கு தாயினுடைய ஆட்சிதான் தமிழகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் இந்தத் தாயின் ஆட்சியில் இந்த ஆண்டிலேயே அந்தப் பள்ளியைத் தரமுயர்த்த அனுமதி வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.

2018 ஜூன் 5]

திரு. கி. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலேயே அனுமதி வழங்கப்படும் என்று கூறிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களக்காடு பகுதியில் மேல்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. அதில் 1,432 ஆண்கள் மற்றும் பெண்கள் பயின்று வருகின்றனர். பெண்களுக்கென்று தனியாகப் பள்ளி ஆரம்பித்து வைத்தால், அங்கு படிக்கின்ற பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்பாக இருக்கும். அதே நேரத்தில், அதே பள்ளியில் இட வசதியும் கட்டடமும் இருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். பெண்களுக்கென தனியாகப் பள்ளி ஆரம்பிக்கப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் ஆண் பெண் இரு பாலர் படிக்கின்ற பள்ளியைப் பிரிக்க வேண்டுமென்றால், உயர்நிலைப் பள்ளியாக இருந்தால் மட்டும்தான் தனியாகப் பிரிக்க முடியும். மேல்நிலைப் பள்ளியாக இருக்கும் பட்சத்தில் தனியாகப் பிரிக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் தனியாக பள்ளி ஆரம்பிக்காமல் இந்த ஆண்டு அதை மகளிர் உயர்நிலைப் பள்ளியாகப் பிரிப்பதற்கு தேவையான நிதி மற்றும் இடங்களை நீங்கள் தருவீர்களேயானால், இந்த ஆண்டிலேயே நிறைவேற்றித் தரப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

[2018 ஜூன் 5

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், தாழையூத்து ஊராட்சி அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நிதர்சனமான உண்மை என்னவென்றால், தமிழ்நாட்டில் ஆரம்பப் பள்ளிகளில் மாணாக்கர்களின் சேர்க்கை எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. அதனால் பல கல்விச் சாலைகளை மூட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருப்பதாக ஒரு தகவல் வந்திருக்கிறது. அது எந்த அளவிற்கு உண்மையென்று எனக்குத் தெரியாது. தெரியாவிட்டாலும்கூட, இன்று பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் ஆங்கிலத்தில் படிக்க வேண்டும் என்று மிகுந்த ஆர்வத்துடன் இருக்கிறார்கள். பரீட்சார்த்த முறையில், bi–lingual schools, தமிழ் ஆங்கிலவழி ஆரம்பப் பள்ளி, தமிழ் ஆங்கிலவழி நடுநிலைப் பள்ளி என்று ஒரே வகுப்பில் bi–lingual ஆகக் கொண்டு வர வேண்டும். ஏனென்றால் நாங்கள் ஆரம்ப காலத்தில் convent–ல் படித்த காலத்தில், ஆசிரியர் பெருமக்கள் பாடங்களை, தமிழில் சொல்லிக் கொடுத்துவிட்டு, பின்னர் ஆங்கிலத்திலும் சொல்லிக் கொடுப்பார்கள். அதுபோன்று பரீட்சார்த்த முறையில் ஆரம்பப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் அதுபோன்ற ஒரு முயற்சி எடுப்பதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதைக் கேட்டுக்கொண்டு நிச்சயமாக எங்கள் தொகுதிக்கு அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு மட்டும் கேட்டுக்கொண்டு விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பள்ளியில் நெறிமுறைகளுக்குட்பட்டு, மாணாக்கரின் எண்ணிக்கையும் இருக்கிறது, நிதியும் கட்டியிருக்கிறார்கள். எனவே, தரம் உயர்த்துவது குறித்து, இந்த ஆண்டிலேயே அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆங்கிலவழிக் கல்வி குறித்து இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுதான், பள்ளிக் கல்வித் துறை வரலாற்றிலேயே, இந்தியாவிலேயே தமிழகத்தில், 6 ஆம் வகுப்பு முதல் ஆங்கிலத்திற்காக ஒரு தனி வகுப்பையே தந்தார் என்பதைத்

2018 ஜூன் 5]

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில் இன்று தொடக்கப் பள்ளி முதல் ஆங்கிலவழிக் கல்வியைக் கொண்டுவர முடியுமா என்ற ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அங்கன்வாடியில் இருந்து ஆங்கிலத்தில் கற்றுத் தர வேண்டும் என்ற ஒரு நிலையை மனதில்கொண்டுதான் மாண்புமிகு முதல்வர் அவர்களும் துணை முதல்வர் அவர்களும் சமூக நலத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அது அரசின் ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கும்பகோணம் கல்வி மாவட்டத்தில் உள்ள நீலிதநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று பொது மக்கள் பங்கீட்டுத் தொகையாக ரூ.2.00 இலட்சம் செலுத்தி, அரசிற்கு அதற்கான முன்மொழிவுகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன.* S.S.L.C *படித்த மாணவர்கள் பள்ளி இறுதி வகுப்புகளான +1, +2 படிப்பதற்கு கடிச்சம்பாடி மேல்நிலைப் பள்ளி அல்லது திருப்புரம்பியம் மேல்நிலைப் பள்ளிக்குதான் செல்ல வேண்டியுள்ளது. தஞ்சை மாவட்டத்தின் கடைசி எல்லையாக இருக்கிற நீலிதநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தந்தால், கொள்ளிடம், மதனத்தூர் புதிய பாலம் வழியாகப் பக்கத்து மாவட்டமான அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் இங்கு வந்து படிப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே, மாணவச் செல்வங்களின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீலிதநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அறிவித்தபடி, ஒரு பள்ளியைத் தரம் உயர்த்திக் கொடுத்ததற்கு, கும்பகோணம் தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்தப் பணியையும் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது கடந்த ஆண்டே ஒரு பள்ளி தரம் உயர்த்தித் தரப்பட்டதாகச் சொன்னார்கள். இதிலிருந்து மாற்று மனப்பான்மை எங்களுக்கு இல்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ளமுடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த தேவையான பொதுமக்களின் பங்களிப்பு நிதியான ரூ.2.00 இலட்சத்தை சென்ற ஆண்டே கட்டியிருக்கிறார்கள் என்பதைக் கோப்பிலே பார்த்திருக்கிறேன். ஆகவே, அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக பள்ளிகளைத் தரம் உயர்த்துகிறபோது, அதாவது நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துகின்றபோது, பொதுமக்களின் பங்களிப்புத் தொகையாக ரூ.1.00 இலட்சம் கட்டவேண்டும். மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துகிறபோது ரூ.2.00 இலட்சம் கட்டவேண்டுமென்று ஒரு விதிமுறையை சுட்டிக்காட்டி அரசாணை வெளியிட்டிருக்கிறோம். அந்தக் காலக்கட்டத்திலே பொதுமக்களின் பங்களிப்பு தேவையாக இருந்தது. Number of schools upgrade செய்கிறபோது மக்களிடமிருந்து பங்களிப்புத் தொகை எவ்வளவு வந்திருக்கிறது என்று பார்த்து, அதற்கேற்ப பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் இன்றைக்கு புதிய திட்டங்கள் வந்துவிட்டன. குறிப்பாக RMSA வந்த பிறகு, அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் வந்ததற்குப் பிறகு, மத்திய அரசாங்கத்திடமிருந்து அதற்கான நிதியொதுக்கீடு எல்லாம் வந்து, மத்திய அரசாங்கத்தின் நிதியொதுக்கீட்டோடும், நம்முடைய பங்களிப்போடும் பெரிய அளவிலே, நூற்றுக்கணக்கான அளவிலே உயர்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தக்கூடிய நிலை வந்துவிட்டது. ஆக, இப்படி நிதியுதவிகள் பல இடங்களிலிருந்து வரக்கூடிய இந்தக் காலகட்டத்தில், மாறிவரும் இந்தச் சூழ்நிலையில் பொதுமக்களின் பங்களிப்பான ரூ.1.00 இலட்சத்தை அவசியம்

2018 ஜூன் 5]

கட்ட வேண்டும் என்ற அந்தச் சுமையை ஊர் பொதுமக்கள்மீது நாம் சுமத்த வேண்டுமா? அல்லது அதை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த ரூ.2.00 இலட்சம் கட்டவேண்டுமென்ற விதியை வைத்திருக்கிறீர்கள். இது கிராமங்களிலே ஒரு முக்கியமான காரியம். பல இடங்களிலே பார்த்தீர்கள் என்றால், பள்ளிகளின் தேவை அதிகமாக இருக்கிறது. சிறிய கிராமங்களில் உள்ள பள்ளிகளைத் தரம் உயர்த்துகிறபோது இந்த ரூ.1 இலட்சம், ரூ.2 இலட்சத்தை அந்த community–*யிலிருந்து வசூல் செய்வது சிரமமாக இருக்கிறது. எனவே, இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் புதிய திட்டங்களுக்கு நாம் பெற்றிருக்கக்கூடிய நிதியுதவிகள் இவற்றையெல்லாம் கருத்திலேகொண்டு, பொதுமக்களின் பங்களிப்பான ரூ.1 இலட்சம் கட்டவேண்டும், ரூ.2 இலட்சம் கட்டவேண்டும் என்ற இந்த விதிகளுக்கு நீங்கள் விலக்கு அளித்து பொதுமக்களின் பங்களிப்பு இல்லாமலேயே பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து சரியான கருத்துதான். இருந்தாலுங்கூட, அரசுக்கு நிதி தேவைப்படுகிறது. நபார்டு திட்டத்தின் மூலமாக 8 வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக்கூடங்கள் கட்டுகிறபோது ஏறத்தாழ ரூ.2.18 கோடி நிதியை நாங்கள் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அதேபோல, 4 வகுப்பறைகள் கட்டுகின்றபோதும் ரூ.1.17 கோடி நிதியை நாங்கள் செலவு செய்யவேண்டி இருக்கிறது. புதிய கட்டடங்கள் கட்டிய பிறகும் மாணவர்களுக்குத் தேவையான* furnitures *வாங்க வேண்டியிருப்பதால் நாங்கள் இதுபோன்ற நிதிகளைத் திரட்டிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வைத்திருக்கின்ற கோரிக்கை நியாயமான கோரிக்கை என்பதால் அதை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அவர்களோடு கலந்து பேசி அதுகுறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2018 ஜுன் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய லால்குடி தொகுதி மிகவும் பிற்பட்ட பகுதி. அங்கு காணக்கல் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் நடராஜன் அவர்கள் கை காட்டுகிறார். நான் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன். (சிரிப்பு)

(திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் முன்வரிசையைப் பார்த்து கை அசைத்தார்.)

கடந்த ஆண்டு காணக்கல்லில் உள்ள பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கடந்த முறை 125-க்கும் மேற்பட்ட பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட காரணத்தால், 5 கிலோ மீட்டருக்குள் இருக்கும் பள்ளிகளை அந்தப் பட்டியலிலிருந்து எடுத்துவிட்டதாகச் சொன்னார்கள். எனவே, இந்த ஆண்டு அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவாரா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். தில்லை நடராஜர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள், அதை கொடுக்கக் கூடாது என்று கையை அசைத்துக் கொண்டிருக்கிறார். (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி இந்த ஆண்டு நிறைவேற்றுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.